விலை ரூபா 1-00 ☆

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 6 ஜ. ஆகிர் 24 இதழ் 65

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19—4—82

## யாழ். சர்வதேச அரங்கு:
## இவ்வருட இறுதியில் பூர்த்திபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் அமைக்கப்படவிருக்கும் சர்வதேச விளையாட்டு அரங்கு, இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் பூர்த்திசெய்யப்படும். அடுத்த வருட ஜனவரி மாதத்தில் முதலாவது சர்வதேசப் போட்டி இங்கு நடைபெறும்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நகருக்கு விஜயம் செய்திருந்த காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா தலைமையிலான குழு யாழ். நகரில் காக்கைதீவில், சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கு அமைக்கத் தீர்மானித்தது தெரிந்ததே.

நேற்று இப்பகுதிக்கு விஜயம் செய்திருந்த விளையாட்டு அமைச்சின் தொழில்நுட்ப அதிகாரி டாக்டர் கலன் பேரேரா இந்தத் திட்டத்தை ஊர்ஜிதம் செய்துள்ளார். இவருடன், மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. எம். எம். குலநாயகம் ஆகியோரும் விஜயம் செய்திருந்தனர்,

சர்வதேச விளையாட்டு அரங்கிற்காக பத்து முதல் பதினைந்து ஏக்கர் காணி பயன்படுத்தப்படவிருக்கிறது.

யாழ், சர்வதேச விளையாட்டு அரங்கில் முதலாவது சர்வதேச விளையாட்டுப்போட்டி 1983 பொங்கல் விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரெஞ்சு ஆங்கில மொழிகளில்
# தேவாரம் திருவாசகம்!

### தலைநகர் பெயர்மாற்றம்

கராரே, ஏப். 18

சிம்ப்பாவேயின் தலை நகரான சோடனின் பெயரை சராரே என்று மாற்றுவதென நேற்று நடைபெற்ற இரண்டாவது சுதந்திரதின கொண்டாட்டத்தில் அறிவிக்கப்பட்டது. (கு)

## உலக இந்து மாநாட்டில் நூல்கள் விநியோகம்
### கொழும்பு நோக்கி பேராளர்கள்

(கொழும்பு)

**நாளை மறுதினம் கொழும்பில் ஆரம்பமாகும் அகில உலக இந்து மாநாட்டிற் கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், பார்வையாளர்கள் அனைவரும் நாளை கொழும்பு வந்து சேருவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

அகில உலக இந்து மகாநாடு நாளை மறுதினம் இருபத்தோராம் திகதி முதல் இருபத்து ஐந்தாம் திகதி வரை நடைபெறுகிறது. முதல்நாள் நிகழ்ச்சியை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆரம்பித்து வைப்பார்.

இம் மகாநாட்டின் ஒரு சிறப்பு அம்சமாக தேவார, திருவாசகங்களை பிரெஞ்சு மொழியிலும், ஆங்கிலமொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு, பதிப்புகள் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும்.

மகாநாட்டுக்கான முதலாவது வெளிநாட்டுக் குழு; நேபாளத்திலிருந்து சுவாமி யோகிராஜ் ஹரஹிநாத் தலைமையில் நேற்று கொழும்பு வந்தது. இக்குழுவில் முன்னாள் நேபாள பிரதமர் நாகேந்திர பிரசாத் ரியாலும் இடம் பெற்றுள்ளார்.

கிழக்கு ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், கென்யா ஆகிய நாடுகளிலிருந்து பேராளர்கள் இன்று வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது இந்தியா, சிங்கப்பூர். மலேசியாவிலிருந்து ஐம்பது பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

இதற்கிடையே இந்து மகாநாட்டில் பங்குபற்ற இந்தியாவிலிருந்து மடாதிபதிகளும், சமயப் பெரியார்களும் கொழும்புவரத் தொடங்கியுள்ளனர்.

மகாநாட்டையொட்டி இலங்கையில் ஸ்தலயாத்திரை என்னும் நூல் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. இராசதுரையினால் வெளியிடப்பட்டுள்ளது

இந்நூலில் இலங்கையிலுள்ள இந்துக்கோவில்களின் மூர்த்தி விபரம், திருவிழா விபரம், ஆகியவற்றுடன் தேர் சிற்பவேலை சம்பந்தமான புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன.

மன்னார் திருக்கேதீஸ்வரத்திலிருந்து திருகோணமலை கோணேசர் கோயில் வரையி

(8ம் பக்கம் பார்க்க)

### இளம் பெண் மர்ம மரணம்:
## நீதவான் இன்று விசாரணை; விடுதிக்கு பொலிஸ் காவல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஒரு விடுதியில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்ட ஒரு இளம் பெண்ணின் மரண விசாரணை யாழ். நீதவான் திரு. ரி.ஜோகநாதனால் இடைநிறுத்தப்பட்டு இன்று காலை யாழ். நீதிமன்றத்தில் விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

ஒரு குழந்தைக்குத் தாயான இப்பெண், கடந்த பதினைந்தாம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுமரணமானார்.

மரணத்தில் எழுந்த சந்தேகத்தைத் தொடர்ந்து திடீர் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையை இடை நிறுத்திய யாழ். நீதவான், யாழ். சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை(இன்று) திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று உத்தரவிட்டு, விசாரணையின்போது விரும்பியவர்கள் சாட்சியமளிக்கலாம் என்றும் பொலிசாருக்குப் பணித்துள்ளார்.

சாட்சிகள் இன்று ஆஜர் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதனின் உத்தரவின் மீது காலஞ்சென்ற இளம் பெண் வசித்த விடுதி முத்திரையிடப்பட்டு, வீட்டைப் பொலிஸார் காவல்புரிந்து வருகின்றனர்.

## பிரதமர் இந்திராவுக்கு சவூதியில் குதூகல வரவேற்பு

றியாட், ஏப். 18

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று காலை சவூதி அரேபியாவின் தலைநகர் றியாட் வந்துசேர்ந்தார்.

அவருக்கு விமான நிலையத்தில் குதூகல வரவேற்பளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் துணைப் பிரதமர்கள் அப்துல் அஸீஸ், அப்துல் அஜீத் ஆகியோர் வரவேற்றனர்.

இருநாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. அங்கு நடைபெற்ற இராணுவ அணிவகுப்பு மரியாதையும் பிரதமர் இந்திராகாந்தி ஏற்றுக்கொண்டார்.

விஷேசமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் அமர்ந்திருந்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் திருமதி காந்திக்கு

(8ம் பக்கம் பார்க்க)

### ஆர்ஜென்டீனு பிரச்னை:
## 15 நாட்களில் வாபஸாகுமாறு அமெரிக்கா யோசனை
### சமரச பேச்சு வார்த்தை முடிந்தது?

புவனர்ஸ் அயர்ஸ், ஏப். 18

போக்லண்ட் நெருக்கடி குறித்து ஆர்ஜன்டீனு தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. அலெக்ஸாண்டர் ஹேக் உத்தியோகபூர்வ பேச்சுக்களை முடித்துக் கொண்டார்.

பேச்சுவார்த்தைகளைப் பற்றி எந்தவித தகவல்களும் வெளியிடப்படவில்லை.

சிலசமயங்களில் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆர்ஜண்டீனு துருப்புகள் 15 நாட்களுக்குள் வாபஸ் பெறவேண்டும் என்றும் யுத்த வலயத்தை நோக்கிவிரைந்து கொண்டிருக்கும் பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் உடன் நிறுத்தப்படவேண்டுமென்றும் இப்பிரச்னையை தீர்வுக்கு கொண்டு வரும் வரை போக்லண்ட் தீவை, பிரிட்டிஷ், ஆர்ஜன்டீனு அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக நிர்வகிக்க வேண்டும் என்றும் அமெரிக்கா ஆலோசனை தெரிவித்ததாக அறியப்படுகிறது. (கு)

## சீனுவின் முதலாவது வர்த்தக விமானம்!

பீக்கிங், ஏப். 18

சீனு முதன்முறையாக வர்த்தகரீதியிலான விமானமொன்றை உற்பத்திசெய்துள்ளது.

'யூ-7' என்று அழைக்கப்படும் இந்த விமானத்தில் சுமார் 50 பிரயாணிகள் பிரயாணம் செய்யலாம்.

இந்த விமானம் நேற்று பீக்கிங்கில்உள்ள ''நனுவான்'' விமான நிலையத்திலிருந்து தனது கன்னிப்பிரயாணத்தை ஆரம்பித்தது.

வர்த்தகரீதியில் இதேமாதிரி விமானங்களை மேலும் உற்பத்தி செய்ய சீனுமுடிவு செய்துள்ளது என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அறிவித்துள்ளது. (கு)

### செய்தியாளருக்கு காப்புறுதி

சென்னை, ஏப். 18

பத்திரிகைச் செய்தியாளருக்கு காப்புறுதித் திட்டமொன்றைத் தாமாக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கிணங்க, சேவையிலிருக்கும் ஒரு பத்திரிகைச் செய்தியாளர் விபத்தில் அல்லது இயற்கையாகக் காலமானுல் அவரது குடும்பத்துக்கு முதலில் பத்தாயிரம் ரூபா வழங்கப்படும்.

மணிவாக்கு

சாதி ஒழித்திடல் ஒன்று – நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றென்று
பாதியை நாடு மறந்தால் – மற்றப்
பாதி துலங்குவதில்லை.

— பாரதிதாசன்.

# நமது நோக்கு

## ஜனநாயகமா.சர்வாதிகாரமா?

தரம்குறைந்த சிற்றுண்டிச்சாலைக்குப் போக நேரிட்டால் ''டீயா, காப்பியா?'' என்ற வழமையான கேள்வி கேட்கப்படும்.

இவ்விரண்டில் ஒன்றை விரும்பும் எவரும் சற்றே தயங்குவது இயல்பு. காப்பிதான் அவர் சுவைக்கும் பானமானாலும், தரமானதா? இங்கு கலப்பிடமில்லாத காப்பி ஏது? என்பதே அதன் காரணம்; அதனிலும் பார்க்க நல்ல தேநீர் தேவலையென முடிவு கட்டி, 'டீ' என்பார்.

'ஜனநாயகமா, சர்வாதிகாரமா மக்கள்விரும்புவது' என்ற கேள்வி தேர்தல் பிரசாரத்தில் ஒவ்வொரு முறையும் இடம்பெறும்?

கடந்த பொதுத்தேர்தலில் ஐ. தே. கட்சி கடும் போட்டியாகக் கண்ட சிறிமா அம்மையார் 'ஜே. ஆர்' சர்வாதிகாரப் போக்கை நாடுகிருரென்று எச்சரித்தது ஞாபகம்.

இன்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவே இக்கேள்வியை எழுப்புவது விசித்திரம் மட்டுமல்ல; சிந்தனைக்குமுரியது.

'புரட்சி புரட்சி' என்று வாய் கிழியக் கத்திய இடதுசாரிக் கட்சிகள் படுத்துவிட்டன என்பது ஒரு கருத்து; ஆட்சிக்கு என்றுமே போட்டியாக விருந்த சிறிலங்கா உட்போரில் ஈடுபடுவதால் அதனையிட்டு அஞ்சவேண்டியதில்லையென்ற உட்கருத்து இக்கேள்வியில் தொனிக்கிறது. எவ்விதத்திலும் பெரும் போட்டியாகமுடியாத ஜே. வி. பி. (ஜாதிக விமுக்தி பேரமுன) சர்வாதிகாரப் போக்குடையதாகையால், தமது கட்சியின் ஜனநாயக ஆட்சியே தொடரவேண்டுமென மக்களை கேட்டுவருகின்றார்

ஜனநாயக ஆட்சியில் குறைகள் பல. ஆனால் அதனிலும் மேலான ஆட்சிமுறை இல்லையே! எனவே மக்கள் அதனை விரும்புவாரென்ற போலிநம்பிக்கை எழுவது சகஜம்.

ஒரு நல்ல ஜனநாயக ஆட்சியில் பலத்த எதிர்க்கட்சி இன்றியமையாதது; இது கிடைக்கவில்லையே என்று கண்ணீர் விட்டவர் இன்றைய ஜனாதிபதி அன்றைய பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

அது எத்தகைய கண்ணீரென்பது இன்று புலப்படும்; சிறிலங்காசுதந்திரக் கட்சி பிளவுபட்டிருக்கிறது; ஆனால் எந்நேரமும் உயிர்த்தெழுந்து வெற்றிபெற முடியும். எனவே சாகாத பாம்பை குறை உயிரில் விடுவது ஆபத்தென்று அமரர் பண்டாரநாயக்கா பற்றிய பழைய உபகதைகள் புதிய ஆராய்ச்சி வடிவில் வெளிவருகின்றன. உண்மையில் சிறிலங்கா கடும்போட்டியாக அமைவது அசாத்தியமல்ல.

அதென்னவானாலும் ஜனநாயகம் மக்களின் விருப்பமானால் இன்றைய ஆட்சியில் பறிபோன பாராளுமன்ற அரசியல் முறையில் பாக்கி எவ்வளவு இருக்கின்றது? இதனைத் திரும்பவும் செப்பனிடுவது எப்படி?

நாட்டில் உருவாகும் அரசியல் 'தாச்சி விளையாட்டில்' ஆட்சிக்கு வருகிற கட்சிக்குப் போட்டியான எதிர்க்கட்சி உண்டா? என்பது முக்கிய சிந்தனை.

மக்கள் இவ்வாறு சிந்திக்க முற்பட்டால் நாட்டுக்கும் இன்று ஆளுங்கட்சிக்கும் நன்மைகிட்டும்.

## விபத்தும் வியாதியும்

பல்லாயிரக்கணக்கில் உழைக்க (காசடிக்க) வேண்டுமானால் தனியார் மருத்துவமனை ஒன்றை அல்லது, மோட்டர் கராச் ஒன்றை நடத்துவது இன்று மிகவும் உசிதமானது!

ஒன்று மனித வாகனத்தை பழுது பார்ப்பது; மற்றது போக்குவரத்து வாகனத்தை பழுது பார்ப்பது; இவ்விரண்டு தொழில்களுக்கும் ஏற்பட்டிருக்கும் கிராக்கி கற்பனைக்கெட்டாதது.

கொழும்பு நீட் அவெனியூ என்ற இடத்தில் நிற்பாட்டியிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றை ஒரு தனியார் வான் மோதியதால் 15பேர் கடும் காயமடைந்ததோடு 12 வயதுடைய மாணவன் ஒருவன் தனது வலதுகையை இழந்துவிட்டான்.

இதில் நுட்பமான விடயங்கள் இரண்டு கவனத்துக்குரியன: தனியார் வாகனம் பிரயாணத்துக்குரிய நிலையில் உள்ளதா? அந்த வாகனத்தை ஓட்டிய சாரதியும் இ. போ. ச. ஊழியர்; ஓய்வுநேரத்தில் கொஞ்சப் பணத்தை கூட உழைக்க முயற்சித்தவர்: அவருடைய தகைமை எவ்விதம்?

பொலிஸார் விசாரணை இவ்விரண்டுக்கும் விடையளிக்கும். நாம்மேலே குறிப்பிட்ட கருத்து இந்த விபத்துக்கும்–இதுபோன்ற விபத்துக்களுக்கும், மனித வாகனத்தின் வியாதிகள் விபத்துக்குள்ளாக முடிவதற்கும் காரணமாகின்றது.

போக்குவரத்து பிரச்சினை இன்றும் மோசமானநிலை; இ. போ. ச. வுடன் தனியார்துறைகடும் போட்டி, 'கண்டநின்ற' வான்களெல்லாம் கடும் சேவையில் கலந்துகொள்கின்றன. அவற்றிற்கு அடிக்கடி வியாதி ஏற்படுவது வழக்கம். கராச்சில் தாமதிக்கமுடியாத கட்டம். அங்குள்ள ஊழியர்கள் அவற்றை அரைகுறையில் குணப்படுத்தி விடுகின்றனர்.

நெடுஞ்சாலையில் அதிகரித்துவரும் விபத்துக்களுக்கு இது ஒரு முக்கிய காரணம்.

மற்றது சாரதியின் அஜாக்கிரதையும், திறமையின்மையு ; ஓய்வு நேரத்தில் பிரத்தியேக வைத்தியம் [Private Practice] நோயாளியை – மனித அல்லது போக்குவரத்து – செவ்வனே கண்காணித்து தக்க வைத்தியம் செய்ய அமைதியான ஆறுதலான பரிசோதனைக்கு நேரமெங்கே?

கடமை நேரத்தில் அரசினர் ஆஸ்பத்திரியில் நூற்றுக்கணக்கான நோயாளிகளைத் தட்டிக்கழித்துவிட்டு மருத்துவமனைகள் ஒவ்வொன்றாய் அலைந்து திரியும் மருத்துவ நிபுணர்கள் எத்தனை வியாதிகளை விபத்துக்குள்ளாக்கி விடுகின்றனர்?

பிறநாடுகளில் உழைக்கக்கூடிய பெருஞ் சம்பளத்தை இங்கு உழைக்க முயன்றால் விபத்துக்கள் வியாதிகளாகவும், வியாதிகள் விபத்துக்களாகவும் மாறும் சாதனையில் சிறிலங்கா முன்னிற்கும்.

# அகத்தும் புறத்தும் சிவன்கழல் ஏந்திய செல்வர்

தம்வாழ்நாள் முழுவதையும் சிவத்தொண்டுக்கும், தமிழ்த் தொண்டுக்கும் அர்ப்பணித்த ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகளின் குருபூசைத் தினம் இன்று.

விரோதி வருஷம் சித்திரை மாதம் 10ம் திகதி (22–4–49) தசமி அவிட்ட நாள் கூடிய வெள்ளிக்கிழமை பகல் 10–30 மணியளவில் திருச்சிதம்பரத்திலேயே இப் பெரியார் அம்பலவாணன் திருவடி அடைந்தார்கள். தமது தாய் மற்றும் உடன் பிறப்புக்களைத் தவிக்கவிட்டு யாவரும் காணா வண்ணம் 14 வயதிலே சிவஸ்தல யாத்திரைசெய்யும் நோக்கமாகத் தென் இந்தியாவுக்குச் சென்றவர் பின்பு தம் தாய் நாட்டிற்கு வந்திலர். சுவாமிகள் இறைவனடி அடைந்தபோது வயது64. இந்தஐம்பது வருடகாலத்தில் சுவாமிகள் சமயத்துக்கும், தமிழுக்கும் ஆற்றிய பணி அளப்பற்றது. இலக்கணம்நன்ருகக்கற்று அக்காலத்தில் வாழ்ந்த சைவப் பெரியார்களினதும், சைவ ஆதீனங்களினதும் பெருமதிப்புக்கு உரியவராகி அரிய பெரிய சைவநூல்களை ஆராய்ந்து யாவருக்கும் பயன்படக்கூடிய வகையில் அவற்றை வெளிப்படுத்த உதவி அளித்துப் பெரும் புகழ் எய்தினர்

'ஈழநாடு' ஸ்தாபனம் சுவாமிகளின் அருளால் உதித்ததாகும். சென்ற ஆண்டு சுவாமிகளின் குருபூசை வழமைபோல் இப்பத்திரி காலயத்தில் நடைபெற்ற சில வாரங்களின்பின்சுவாமிகளின்படம் உட்படக் காரியாலயம் தீக்கு இரையானபோதிலும்மீண்டும் உயிர்பெற்று உற்சாகத்துடன் இயங்குவது சுவாமிகளின் அருளாலேயேஎன்பதில்ஐயமில்லை ''அகத்தும், புறத்தும் சிவன்கழல் ஏந்திய செல்வர்'' என்னும் தலைப்பின் கீழ் ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள் இலக்கணச் சுவாமிகளின் நினைவு மலரில் இருக்கும் ஒரு கட்டுரையை அன்னாரதுகுருபூசைத்தினமாகிய இன்று இங்கு பிரசுரிக்கின்றோம். [ஆ–ர்]



ஸ்ரீமத் இலக்கணச் சுவாமிகள்

அரிய சித்தாந்த சாஸ்திரத்தை ஒரு சிவஞானச் செல்வர் அருளிச்செய்த உரையுடன் அதனைத் தேடிப் பிரதிசெய்து வைத்திருந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளாவர். இவர்கள் பெற்று, சூரியனார் கோயிலாதீனம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குபரேசதேசிகர் அவர்கள் திவ்விய சமூகத்தே சமய, விசேட, நிர்வாண தீக்ஷையும், சைவ சந்நியாசமும் பெற்றவர்கள். அகத்தும் புறத்தும் சிவபெருமானைப் பூசிக்கும் நியமமும் பூண்டவர்கள். சைவ சாஸ்திரம் பயிற்சியிலும் போதனையிலும் சிறந்து விளங்கினவர். ஸ்ரீமாதவச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த சிவஞான மாபாடியத்தைச் செப்பஞ் செய்து திருத்தமாக அச்சுவாகனமேற்றுவித்தவர்கள்.

ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் தொகுத்தருளிய கிரியாதீபிகையைச் செப்பமாக அச்சிட்டு உபகரித்தவர்கள். சைவ சந்நியாசபத்ததி, தருமை ஆதீனத்து ஸ்ரீ குருஞானசப்பந்த பரமாசாரிய மூர்த்திகள் அருளிச்செய்த முத்தி நிச்சயம், அதன் மாபாடியம் முதலிய ஞானநூல்களையும் பரிசோதித்து உதவியவர்கள். பெரிய புராண உரையாசிரியராகிய சிவக் கவிமணி சைவப்பெரியார் சுப்பிரமணிய முதலியார்

- ஸ்ரீலஸ்ரீ ஈசானசிவாசாரியார் -

யாழ்ப்பாணத்தைச் சன்மபூமியாகவுடையவர். இவர் தமது பதினன்காம் ஆண்டிலே நந் தமிழகத்துக்கு வந்து, ஸ்ரீ செல்லப்பாசுவாமிகள் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் முதலிய பெரியோர்களிடத்தே இலக்கண, இலக்கியப் பயிற்சி அவர்களுக்கு அருந்துணையாய் நின்று பெரியபுராணப் பேருரைப் பணிக்குச் சித்தாந்த நுண்பொருள்களை ஆங்காங்கே விரைந்தருளிச் சிறப்பித்தவர்கள். இவர்கள் தொகுத்து வைத்திருந்த திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் உரை இப்பெருநூலாகும்.

இன்று அப்பர் சுவாமிகள் குருபூசை

# சேக்கிழார் கண்ட திருநாவுக்கரசர்

ஒரு வரலாற்றுக் காவியம் எழுதுவது எளிதன்று. அதிலும், உணர்ச்சி நிறைந்த பெருமக்கள் வரலாற்றை அந்த உணர்ச்சியில் இம்மியளவும் குறையாமல் வடித்துத் தருவதென்பது அரிய பணி. உளம் நிறைந்த பக்தி அனுபவத்தாலும், அடியார்கள் பெரிய புராணத்தை இயற்றித் தராதிருப்பாரானல் தூய சிவநெறியின் வரலாறு கிடைக்காமலே போயிருக்கும்! சிவநெறி வாழ்க்கையோடியைந்ததென்னும் பேருண்மையை உலகுக்கு உணர்த்துவதற்குப் பெரிய புராணமே நமக்குரிய சிறந்த சாதனமாகத் திகழ்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மாட்சியில் மனங்கலந்த ஈடுபாடு கொண்டமையாலுமே சேக்கிழார்பெருமானால்அதைச் செய்யமுடிந்தது. சேக்கிழார் அப்பரடிகள் வரலாற்றை அருந்தமிழ்ச் சேக்கிழார் அருள் உணர்வு பொங்கித் ததும்பி

(7ம் பக்கம் பார்க்க)

# சைவ

சைவ சித்தாந்த சாஸ்திரங்களிற் சிறந்து விளங்குவதும் ''ஆராய்ச்சி'', ''அநுபூதி'' என்னும் இருவகை ஞானங்களுள் அநுபூதி ஞானத்தையே விதந்தெடுத்தோதுவதுமாகிய திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்ற

நீர்வைக்கந்தன் கொடியேற்றுவிழா இன்று



## பேரொன்றே வினையைப் போக்கும்

சீரெலாம் நிறைந்து யார்க்கும்
சிறப்பினை விளைப்பதான
நீர்வையம் பதியை மேவும்
நிமலனின் புதல்வா! இந்தப்
பாரெலாம் வணங்கும் செய்ய
பதத்தினாய் வினையைப் போக்கப்
பேரொன்றே போதும் கந்தப்
பெருமானே! வணங்குகின்றோம்!
நின்னரும் விழாக்கள் காண
நின்னரும் விரதம் பேண
இன்னலும் இடரும் நீங்கும்
இதயத்தே புனிதம் தோன்றும்
செந்நெலும் வாழைதானும்
செழித்திடவளம் செய்கின்ற
நன்மைசேர் நீர்வை மேவும்
நாதனே! வணங்கு கின்றோம்!

--ம. பார்வதிநாதசிவம்

★ போக்லண்ட் தீவுகள் பிரச்னே:

# ஆர்ஜென்டீனுராணுவஆட்சியாளருடன் ஹெய்க் மீண்டும் பேச்சுவார்த்தை!

புவனர்ஸ்அயஸ், ஏப். 18 போக்லண்ட்தீவுகள் பிரச்னேக்கு தீர்வுகாணும்முகமாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு, அலெக்சாண்டர் ஹெய்க் மீண்டும் நேற்றிரவு ஆர்ஜென்டீனு இராணுவ ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

போக்லண்ட்தீவுகள் நெருக்கடி தொடர்பாக பிரிட்டனுக்கும் ஆர்ஜெண்டீனுவுக்குமிடையே ஏற்படவுள்ள யுத்தத்தை தடுப்பதற்காகவே தான் மீண்டும் ஆர்ஜெண்டீனு இராணுவ தலேவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக திரு. ஹெய்க் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இப்பிரச்னே தொடர்பான சமரசப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும் (ஆர்ஜென்டீனு, பிரிட்டன்) ஒரு உடன்பாட்டிற்கு வரமறுப்பதாக திரு. ஹெய்க் தெரிவித்துள்ளார்.

போக்லண்ட்தீவுகளின் 200 மைல் பிராந்தியத்தை பிரிட்டன் யுத்தவலயமாகப் பிரகடனம் செய்திருப்பது தெரிந்ததே.

அதேவேளே பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மாகரட் தட்சர் நேற்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜோன்நொட்டுடன் போக்லண்ட்தீவுகள் நிலைமை குறித்து கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டது. ]வெ]

## உச்சிமாநாடு

மாஸ்கோ.ஏப்.18 சர்வதேச விவகாரங்கள் குறித்து அமெரிக்க ஜனுதிபதி திரு. றெனுல்ட் றீகனுடன் எதிர்வரும் ஜூன் மாதம் சோவியத் ஜனுதிபதி திரு. பிரெஷ்னெவ் உச்சி மாநாடு ஒன்றை நடத்தவுள்ளார். (வெ)

## உலக இந்து மாநாடு: வெளிநாட்டு பிரதிநிதிகள் விஜயம்

[கொழும்பு] உலக இந்துமகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இலங்கை வரத்தொடங்கியுள்ளனர்.

ஒரே ஒரு இந்து ராஜ்யமான நேபாளத்திலிருந்து தூதுக்குழுவொன்று நேற்றுஇலங்கை வந்து சேர்ந்தது.

இத் தூதுக்குழுவினருடன் நேபாளத்தின் முன்னுள் பிரதமமந்திரி திரு. நாகேந்திரா பிரசாத்தும் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்துள்ளார்.

ஆந்திராவைச் சேர்ந்த மாபெரும் தவயோகி ஸ்ரீசிவபால யோகி மகாராஜ்ஜும் உலக இந்து மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்துள்ளார்.

உலக இந்துமகாநாடு இம்மாதம் 21ம் திகதிமுதல் 25ம் திகதிவரை இலங்கையில் நடைபெறவிருப்பது தெரிந்ததே. (வெ)

## கிராமோதய சபைத் தலேவர்

(மட்டுவில்) மட்டுவில் சரசாலேக் கிராமோதயசபைத் தலேவராக கமலாசனி வித்தியாலய அதிபர் திரு. இ. குழந்தைவேலு தெரிவுசெய்யப்பட்டார். மேற்படி வித்தியாலய மண்டபத்தில் விசேட சேவை அலுவலர் திரு. பொ. திருநாவுக்கரசு தலேமையில் நடைபெற்ற இத்தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட திரு. கருணுனந்தன் சில ஆட்சேபனேகளேக் கிளப்பியபோதும் பின்னர் தேர்தல் சுமுகமாக நடைபெற்றது. (அ)

## பால்மா தொழிற்சாலே

(வெலிசறை) வெலிசறையில் 25 கோடி ரூபா செலவில் பால்மா உற்பத்தி தொழிற்சாலேயொன்று அமைக்கப்படவுள்ளது.

இத்தொழிற்சாலே செப்டம்பர் மாதத்திலிருந்து உற்பத்தியை ஆரம்பிக்குமென்று தெரிவிக்கப்பட்டது, (வெ)

## "ஐ. தே. க. அரசு அதிகாரங்களேமக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது"

### பிரதமர் 'பிரேமா' கூறுகிறுர்

(நீர்கொழும்பு) ''எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் மக்கள் சொந்த முயற்சியினுல் முன்னேறும் சூழ்நிலேயை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது''

மேற்கண்டவாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நீர்கொழும்பில் நடைபெற்ற லயன்ஸ் கழகங்களின் வருடாந்த மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினுர். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தத்தமது வசதிக்கேற்ப மற்றவர்களுக்கு உதவ மக்கள் முன்வரவேண்டும். லயன்ஸ் கழகங்கள் போன்ற தொண்டர் சங்கங்களின் பணி மகத்தானது. அரசாங்கம்இவற்றின் அங்கத்தவர்களுக்கு கிராமோதய சபைகளில் இடம்அளித்துள்ளது.

''இன்றைய அரசாங்கம் பல்வேறு சபைகளின் மூலம் மக்களுக்கு அதிகாரங்களே பகிர்ந்தளித்துள்ளது. இன்று மக்களே இந்நாட்டின் எசமானர்களாக விளங்குகிறுர்கள்'' என்றுர்.

திருமதி ஹேமா பிரேமதாசா இவ்வைபவத்தில் பலருக்கு விருதுகளேயும், வலது குறைந்தோருக்கு மூன்று சக்கர சயிக்கிளகளேயும் வழங்கினுர்.

புடவை கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ், கடற்றெழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர். [வெ]

## தகவல் பரிவர்த்தனே வளர்ச்சி

மெக்ஸிக்கோநகர், ஏப். 18 யுனெஸ்கோவின் அனுசரணேயின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள தகவல் பரிவர்த்தனே வளர்ச்சிக்கான சர்வதேச வேலேத்திட்டத்துக்கான [ஐபிடிசி] அரசாங்கத் தரப்புக் கவுன்ஸிலின்கூட்டம் மெக்ஸிகோவிலுள்ள அகாபுல்கோ நகரில் நடைபெற்றது.

தகவல்துறையில் சர்வதேச உதவிகளே புனரமைப்பது சம்பந்தமான பிரச்னேகள் இங்கு ஆராயப்பட்டன.

நாடுகள் நேரடியாக ஐபிடிசிக்கு உதவியளிக்காமல் வளர்முக நாடுகளின் இத்தகைய திட்டங்களேச் செயல்படுத்துவதற்கு அமெரிக்க தனியார் துறையை ஈடுபடுத்துவது குறித்து அமெரிக்கப் பிரதிநிதிகள் கூறிய கருத்துக்கு பிரதிநிதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

வளர்முக நாடுகள் தமது தகவல் துறையில் தமது உள்கட்டமைப்புக்களேச் சொந்தமாக உருவாக்கவேண்டுமானுல் சர்வதேச தகவல் பரிவர்த்தனே ஒரு நியாயமான ஜனநாயக அடிப்படையில் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது. ஐபிடிசி நிதிக்கு சோவியத் யூனியன் 500,000 ரூபிள்களே வழங்கும் என்று கூறிய சோவியத் பிரதிநிதி வளர்முக நாடுகளின் தகவல் துறையின் அபிவிருத்திக்குத் தமது நாடு அளிக்கும் உதவி பற்றியும் சுட்டிக்காட்டினுர்.

## பாரதிநூற்றுண்டு விழா

[சுழிபுரம்) ''பாரதியார் ஓர் சிறந்த அருளாளர். கவிதையால் மக்களேத் தட்டி எழுப்பியவர். அன்னே பராசக்தியிடத்து அளவிட முடியாத அன்பு கொண்டவர் இதனுல் அன்னேயின் அருள் பெற்றுர்'' என்று பொன்னுலே இளம் சுடர் மன்றம் நடாத்திய பாரதி நூற்றுண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் வழக்கம்பரை சனசமூக பஜனேச்சபைச் செயலாளர் திரு க. வாமதேவன் கூறினுர்.

விழாவிற்கு திரு. சீ. கந்தசாமி தலேமை வகித்தார். இவ்வைபவத்தில் மன்றத்தினரின் நாலாவது ஆண்டு நிறைவு விழாவும் கொண்டாடப்பட்டது. பண்டிதுர் தி. பொன்னம்பலவாணர் தலேமையில் பட்டிமன்றமும் நடைபெற்றது.

## இவர்களின் 'விசா' ரத்துச்செய்யப்படும்

(கொழும்பு) எமது பண்பாட்டிற்குப் பங்கம் விளேவிக்கக்கூடிய வகையில் துர்நடத்தையில் ஈடுபடும் உல்லாசப்பயணிகளின் விசாக்கள் ரத்துச் செய்யப்படவிருக்கிறது.

இலங்கை உல்லாசப்பயணச் சபை எடுத்துள்ள இந்த முடிவின்படி நிர்வாணமாக குளித்தல் போன்ற துர்நடத்தைகள் தடைசெய்யப்படும். இத் தடைகளே மீறுபவர்களின் 'விசா' ரத்துச் செய்யப்படுவதுடன் அவர்கள் உடனடியாக நாடுகடத்தப்படுவார்கள் என்றும் தெரிய வருகின்றது.

## புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான ஆங்கில பயிற்சிவகுப்புகள் ஆரம்பம்

[(மண்டைதீவு) மாவட்ட அடிப்படையில் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட புதிய ஆசிரியர்களுக்கு ஆங்கில பயிற்சி வகுப்புகள் நேற்று முன்தினம் பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலேயில் ஆரம்பமாயின.

இப்பயிற்சி வகுப்புகள் இருபத்தைந்தாம் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

இப்பயிற்சி வகுப்பை கலாசாலே அதிபர் திரு. இ. கனகலிங்கம் குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

## 'மலேரியா' ஒழிப்புக்க ன: 'மலத்தீன்' கிருமிநாசினி தரம் குறைந்ததாம்! நோய்களும் குறைந்தபாடில்லே!

[கொழும்பு] மலேரியா ஒழிப்புத்திட்டத்தின் கீழ் இலங்கையில் பாவிக்கப்பட்டுவரும் 'மலத்தீன்' கிருமிநாசினி தரம் குறைந்ததாகக் காணப்படுகிறது என்று வாஷிங்டனிலுள்ள நோய்த் தடுப்பு நிலேயம் அறிவித்துள்ளது.

மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கென பாவிக்கப்பட்டுவரும் 'மலத்தீன்' கிருமிநாசினிகளின் மாதிரிகள் மேற்படி நிலேயத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதைத் தொடர்ந்தே பாவிப்பிலிருந்து வரும் 'மலத்தீன்' தரங்குறைந்தனவாகக் காணப்படுவது தெரியவந்துள்ளது.

இவ்வாறு 'மலத்தீனின்' தரம் குறைவாகக் காணப்படுவதனுல் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் நோய்கள் மீண்டும் பரவும் அறிகுறிகள் தென்படுவதாக மலேரியா ஒழிப்பு இயக்க டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டின் மலேரியா ஒழிப்புக்கென களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் 20.000 றுத்தல் மலத்தீன், மேற்கண்ட அறிவிப்பின்படி அழிக்கப்படலாமென்றும், இவற்றுக்குப் பதிலாக தரம் வாய்ந்ததும், சக்தி கூடியதுமான மலத்தீன் கொள்வனவு செய்யப்படலாமென்றும் தெரியவருகின்றது.

மலேரியா ஒழிப்புத் திட்டத்துக்கென 120 கோடிரூபாவை வருடந்தோறும் அரசாங்கம் ஒதுக்கிவருகின்றது. 1 79 ம் ஆண்டு 48,000 பேர் மலேரியாவால் பீடிக்கப்பட்டதாகப் பதியப்பட்டது. 80ல் இத்தொகை நூறுகமட்டுமே குறைந்திருந்தது, இவ்வருடத்தின் முதல் கால்பகுதியில் 47,300 பேர் மலேரியாவால் பீடிக்கப்பட்டிருப்பது பதிவாகியுள்ளது. இவ்வாறு மலேரியா நோய்கள் பெருமளவில் தொடர்ந்தும் காணப்படுவதற்கும், மேலும் புதிய இடங்களில் பரவும் அறிகுறிகள் தென்படுவதற்கும் தரம் குறைந்த 'மலத்தின்' பாவிப்பிலுள்ளதே முக்கிய காரணமாகவிருக்கலாமென அதிகாரிகள் கருதுகின்றனர். (கி)

## பழைய நாணயங்களும், கல்வெட்டுகளும்

## வன்னிநாட்டின் பாரம்பரியத்திற்கு சிறந்த உரைகற்களாகும்

(யாழ்ப்பாணம்) ''வன்னிநாடு பழமையும், பாரம்பரியமுமுள்ள பிரதேசமாகும். இதன் பழமைக்குச் சிறந்த உரைகற்களாக ஈழத்தின் பழையநாணயங்களும் ஆதிப்பிராமிக்கல்வெட்டில் குறிப்பாக வவனியா மாவட்டத்திலுள்ள பெரிய புளியங்குளத்திலுள்ள கல்வெட்டில் தமிழ்வணிகன் விசாகன் பற்றிய குறிப்பு வருகின்றது.''

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலேக்கழக வரலாற்று தொல்பொருளியல் விரிவுரையாளரான கலாநிதி சி. க. சிற்றம்பலம் முல்லேத்தீவு யோகபுரம் மல்லாவி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலேயின் க.பொ த. (உயர்தர) மாணவர் மன்றத்தின் இராப்போசன விருந்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''இத்தமிழ்க்கல்வெட்டு தமிழ்வணிகன் பௌத்தத்திற்கு கொடுத்த தானத்தை குறிக்கின்றது. தமிழர்கள் எவ்வாறு பௌத்த செல்வாக்கால் பெயர்களே மாற்றினுர்களென்பதையும் இக்கல்வெட்டு எடுத்துரைக்கிறது. இதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு பிந்திய இன்றைய பௌத்த சிலேவிவகாரம் வவனியாவில் சிங்கள மக்களின் தொன்மையை எடுத்துக்காட்ட கிருஷ்டிக்கப்பட்ட மாயையாகும்.

'இப்பிரதேசத்தில் வாழ்ந்துவரும் மலேயகத்தமிழ்மக்களின் கல்வியிலும் முன்னேற்றத்திலும் நாம் அக்கறைகாட்ட வேண்டும் என்றுர்.

# இந்திய கிரிக்கெட் அணியின் இங்கிலாந்துப் பயணம்

பல்வேறு அபிப்பிராய பேதங்களுக்கும் எதிவாத வழக்குகளுக்குமிடையேயர் இந்திய அணி பல புதிய மாற்றங்களுடன் இங்கிலாந்து பயணமாகிறது. இந்திய அணியின் தெரிவு திட்டமிடப்பட்டபோதே, இங்கிலாந்து அணியின் பிரபல ஆட்டக்காரர்கள் தென்னுபிரிக்கா சென்றதால் பல பிரச்னைகள் கிளம்பின. நிறபேத அரசியலால் சர்வதேச அரங்கில் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது தென்னுபிரிக்கா. இந்த வேண்டாப் பெண்டாட்டியுடன் உறவாட இங்கிலபந்தின் சில வீரர்கள் சேர்ந்து சென்றபோது, சர்வதேச விளையாட்டு அபிமானிகளிடையே சலசலப்பை உண்டாக்கியது. இந்தியாவும் இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்க இங்கிலாந்தின் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை சாதகமான முடிவைத் தந்தது.

வழிதவறிய ஆட்டக்காரர்களுக்கு இங்கிலாந்தின் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை வழியடைப்போம் என்ற உத்தரவாதம் இந்திய அணியினரின் தெரிவை ஊக்கிவைத்தது. முதலில் இந்திய அணியும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர்தான் இந்தியாவில் மீண்டும் ஒரு சலசலப்பு. இந்திய அணித் தேர்வு தவருனது எனப் போர்க்கொடி எழுப்பி இருக்கின்றன இந்திய முன் முன்னணி கிரிக்கட் கழகங்கள்.

இந்திய அணியின் தெரிவில் தகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது; கடந்தகால ஆட்ட சாதனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன; பணபலமும் பிராந்திய உணர்வும் பாரபட்சமான தெரிவுக்கு வழிசெய்துள்ளது என்றெல்லாம் குற்றம்சாட்டப்பட்டுள்ளன.

இவை எந்த அளவுக்கு உண்மையென்பது ஒருபுறமிருக்க, சில விசித்திரமான தெரிவுகள் இந்திய அணியில் இல்லாமல் இல்லை. முதல் தடவையாக ஒரேஒரு விக்கட் கீப்பரை மட்டும் வைத்துக் கொண்டு இந்திய அணி விமானம் ஏறுகிறது. இந்திய அணியின் தெரிவுக்கு முன்னர் நடைபெற்ற பரீட்சார்த்த போட்டியாக கருதப்பட்ட ''ரஞ்சித்கோப்பை'' ஆட்டங்களில் ஆடியவர்களின் சாதனைகள் மறுக்கப்பட்டிருக்கிறன.

ரஞ்சித் இறுதியாட்டத்தில் அபாரமாக ஆடிய சுதாகர் ராவ், மொகிந்தர் அமர்நாத் மற்றம் வெங்கட்ராகவன் பேகின்றேர் ஒதுக்கப்பட்டுள்ளது ஒருவகையில் அதிசயம் எனவே கருதப்படுகின்றது.

புதிய முகங்களாக சேர்க்கப்பட்டுள்ள குலாம் பார்க்கர், சுதிநாயக் போன்றேர் முதல் தர ஆட்டங்களில் நின்றவர்களாக இல்லை. இந்திய அணியின் புதிய துவக்க ஆட்டக்காரரும் புதியவருமான பிரணுப்ரோய் ஒரே டெஸ்டில் முன்னுக்கு தள்ளப்பட்டாலும் தமிழ்நாட்டு சிறிகாந்திற்கும் முன்னுள் சவானிற்கும் எந்த அளவுக்கு திறமையானவர் என்பது நிருபணமாகவில்லை.

இந்தியகாப்டன்கவாஸ்கரின் சர்வாதிகாரம்தான் இந்த நிலைமைக்குக் காரணம் என ஒரு பகுதியினரும், பலதரப்பட்ட செல்வாக்குகள்தான் இதற்குக்காரணம் என இன்னெரு சாராரும்இந்திய அணியின் தெரிவில் கருத்துக்கூறுகின்றூர்கள். கவாஸ்கரின் அபாரதிறமையில் நம்பிக்கை கொண்ட சிலரோ கவாஸ்கரின் தனி மனித சாதனையில் நம்பிக்கைகொள்ளவே செய்கிறூர்கள்.

இந்திய அணியின் இங்கிலாந்துப் பயணம் இப்படியே சர்ச்சைக்குள்ளானுலும் இங்கிலாந்து மண்ணில் சாதக பாதங்களையும் மறக்கமுடியாது. இங்கிலாந்து மண்ணின் குளிர், இந்திய வீரர்களுக்கு அதுவும் புதியவர்களுக்கு என்னசெய்யும் என்பது மிகப்பெரிய பிரச்னை அதேசமயம் தென்னுபிரிக்க உறவால் இங்கிலாந்தின் முன்னணியாட்டக்காரர்களான போய்கொட் கிரகாம்கூச், கிறிஸ் ஒல்ட், அண்டவூட் போன்றேரின் வலுவான எதிர்ப்பு இம்முறை இல்லை எனினும்போதம் இருக்கிறூர், போதும் போதும் என்பது போல். இங்கிலாந்து அணியின் காப்டன் இன்னெரு முக்கியமான தெரிவு! முடிசூடாமன்னன் மைக்பிரயர்வி தனது பெண்வீடான இந்தியாவுக்கெதிராகக் களத்தில் இறங்குவாரா என்பது ஒரு முக்கியமான விடயம்!

எதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

-- இரசிகன்.

## ஆலயத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

(அரியாலை)

'நெருப்பான சுவாலை விட்டெரிந்து பிரகாசிப்பதுபோல, திருச்சபைகள் சுவிசேஷ ஊழியத்திலும், சுவிசேஷ வாஞ்சையிலும் வளர்ந்து பிரகாசிக்க வேண்டும். 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தர்மபுர ஊழியம் அப்பகுதியில் சிறப்பாக இயங்குகிறது. இப்பகுதியில் கட்டப்பட்ட சிற்றுலயம் எமது ஊழியத்தை எடுததுப் பிரகாசிக்கிறது.'

இவ்வாறு யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம் டி. ஹோர்சிங்டன் அடிகளார், நல்லூர் புனிதர் யாக்கோபு ஆலய ஜெப மண்டபத்தில் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்:

''ஆலயத்தின் இருபக்கங்களிலும் நவஜீவன ஸ்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்ட இரு விவசாயத்திட்டங்சளில் பணிபுரியும் ஊழியர்கள் இவ்வாலயத்தில் நடைபெறும் ஆராதனைகளில் கலந்துகொள்வதால் இன்று ஆலயத்தில் இடவசதி போதுமானதாக இல்லை. இந்த நிதியாண்டில் இவ்வாலயத்தை விஸ்தரிக்க எண்ணியுள்ளோம்' என்றூர்.

செயலாளர், பொருளாளர் ஆகியோரின் வருடாந்ந அறிக்கைகளைத் தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. தலைவராக யாழ்ப்பாண அர்ச்டீக்கன் அருட்திரு சாம் டி. ஹோர்சிங்டன் அடிகளாரும், செயலாளராக திருமதி எம். ஆர். குணசேகரமும், பொருளாளராக திருமதி ஆர். ஏ. இராசரத்தினமும், நிர்வாக உறுப்பினர்களாக 10 பேரும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## படகும் மீன்பிடி உபகரணங்களும் கற்கடதீவில் திருட்டு!

[மண்டைதீவு]

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான படகு ஒன்றும் அதனுள் வைக்கப்பட்டிருந்த மீன்பிடி உபகரணங்களும் இனம் தெரியாத சிலரால் கற்கடதீவு என்னும் இடத்தில்த் வைத்து திருடப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்துப் படகுச் சொந்தக்காரரான எஸ். பாலசிங்கம் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வழக்கம்போல் மீன்பிடிப்பதற்காகத் தனது படகில் சில உதவியாளர்களுடன் மண்டைதீவிலிருந்து புறப்பட்டுக் கற்கடதீவு என்னும் இடத்தில் நங்கூரமிட்டுப்படகை நிறுத்திவிட்டு வேறு இடத்துக்குச் சென்றதாகவும், பின்னர் வந்து பார்த்தபோது படகையும் மீன்பிடி உபகரணங்களையும் காணவில்லை என்றும் தமது முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

## இறக்குமதி செய்யப்பட்ட 24தொன்உருக்கு லொறியில் கடத்தப்பட்டது

[கொழும்பு]

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்நிர்மாணிக்கப்பட்டுவரும், விக்டோரியா அணைக் கட்டுக்கென இறக்குமதி செய்யப்பட்ட 24தொன் உருக்கு, லொறியொன்றில் மொரட்டுவ ஊடாககொண்டு செல்லப்பட்டபோது பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

புத்தாண்டு தினத்தில், விபத்தொன்றினைப் பார்வையிடச் சென்றபோதே, விக்டோரியா அணைக்கட்டிடத்துக்கான 24 தொன் உருக்கு லொறியொன்றில் இருப்பதைப் பொலிசார் கண்டு பிடித்தனர்.

உருக்கை ஏற்றிவந்த லொறியின் சாரதியை பொலிசார் அணுகியபோது அவரிடமிருந்து மதுவாடைவீசியதாம். இதனை யடுத்து லொறியினுள்ளே சோதனையிட்டபோது 'மகாவலித்திட்டம்' என்றுபெயரிடப்பட்டு உருக்கு அடுக்கிவைக்கப்பட்டிருந்ததை அவர்கள் கண்டுபிடித்தனர்.

அண்மையில் இந்த உருக்கு கொழும்புத்துறைமுகத்தில், கப்பலிலிருந்தும் இறக்கப்பட்டதென்று பொலிசார் அறிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொள்வதற்காக, லொறியையும், அதனுள்ளிருந்த உருக்கையும் துறைமுக சுங்க அதிகாரிகளிடம் பொலிசார் ஒப்படைத்துள்ளனர். [கி]

## தலைவராகத்தெரிவு

[மட்டுவில்]

தனங்கிளப்பு மறவன்புலோ கிராமோதய சபைத்தலைவராக திரு. நமசிவாயம் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

விசேடசேவை அதிகாரி திரு. அமிர்தலிங்கம் தலைமையில் இத்தேர்தல் நடைபெற்றது.

## ஒரே குடும்பத்தில் அடுத்தடுத்து மூவர் தற்கொலை!

[சாவகச்சேரி]

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்றுவது நபரும் நஞ்சுக்குப் பலியானுர். தந்தையும் இரு புதல்வர்களுமே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர்களாவர். எம். ஜி. ஆர். பித்தரும் மதுப்பிரியருமான பாலாவியைச் சேர்ந்த இராசையா தர்மலிங்கத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

ஒன்றரை வருடத்தின் முன்னரே விவாகம் செய்த தர்மலிங்கத்திற்கு ஒரு பிள்ளையும் உண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவு காரணமாகத் தர்மலிங்கம் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இம்மரணம் தொடர்பாகத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என் தர்மேந்திரன் விசாரணை நடத்தினுர். அப்போது காலஞ்சென்றவரின் மனைவி அன்னலட்சுமி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:–

''சம்பவதினத்திற்கு முதல் நாள் எனது கணவர் தேங்காய் கொண்டு சென்று சந்தையில் விற்றுவிட்டு மதுபோதையில் வீட்டுக்குவந்தார். சாமான்கள் ஒன்றும் வாங்கிவரவில்லை. நான் அவரைப் பேசினேன். அவர் என்னை எனது தாய்வீட்டிற்குப் போகுமாறு ஏசினுர். மறுநாள் நான் சமைத்துக் கெண்டிருக்கும்போது நஞ்சு குடித்துவிட்டேன் என்று எனக்கு முன்பாகப் நச்சுத்திராவகப் போத்தலை வீசினுர்.

''எனது கணவர் ஒரு எம். ஜி. ஆர். பித்தர். எம். ஜி. ஆர். படம் அவர் பார்க்கத் தவறுவதில்லை. அதோடு மதுப்பிரியர். அவர் 6மாத காலத்துக்கு முன் தற்கொலை முயற்சி மேற்கொண்டு இருநாட்கள் வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்றவர். படம் பார்க்க வேண்டாமென்றும் மது அருந்த வேண்டாமென்றும் புத்திமதி கூறிப்பார்த்தேன் அது அவருக்கு நுழையவில்லை'' என்றூர்.

காலமானவரின் தாயார் முத்தையா இராசம்மா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:–

இறந்தவர் எனது இரண்டாவது மகன் 6 மாதத்திற்கு முன் தீபாபளியன்று எனது வீட்டிலிருந்து தான் கிருமிநாசினி குடித்தார். பின்னர் தப்பிவிட்டார். இதற்கு முன் எனது கணவரும் ஒரு மகனும் கிருமிநாசினி அருந்தி மரணமானுர்கள் என்றூர்.

தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸைச் சேர்ந்த திரு. தங்கவடிவேல் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

## நீர்வை உற்சவம் இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான மகோற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் சனியன்று பகல் சங்காபிஷேகமும், ஞாயிறு கார்த்திகைத்திருவிழாவும், புதன்கிழமை இரவு மஞ்சமும், அடுத்தமாதம் 3ம் திகதி பழனியாண்டவர் மாம்பழத் திருவிழாவும், 5ம் திகதி காலை சித்திரத்தேர் வெள்ளோட்டமும், அன்று இரவு சப்பறத் திருவிழாவும் நடைபெறும், 6ம் திகதி காலை புதிய சித்திரத் தேரில் ஆறுமுகப் பெருமான் பவனிவருவார்.

7–ம் திகதி காலை தீர்த்தோற்சவமும், 8ம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

சிவஸ்ரீசுவாமிநாத இராஜேந்திரக்குரு உற்சவத்தை நடத்துவார். [வெ]

## மனநோயாளி தற்கொலை

(சாவகச்சேரி)

தவசிகுளத்தைச் சேர்ந்த க. அன்னம்மா (50) கிருமிநாசினி அருந்தி மரணமானுர். இவர் மனநோயால் பீடிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் 79ம் ஆண்டு முதல் சிகிச்சைபெற்று வந்ததாகவும் முன்னர் முறை தற்கொலை செய்ய முயன்றதாகவும் சாட்சியங்கள் மூலம் தெரியவந்தது.

கிராமசேவை அலுவலர் திரு. அம்பலவாணபிள்ளை, சாவகச்சேரிப்பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் மரணவிசாரணையை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் விசாரணையை நடத்தினுர். தற்கொலைஎனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## 'சாரணர் சேவை மூலம் நாடு முன்னேறும்'

(சாவகச்சேரி)

''கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வருங்காலச் சந்ததியினரான இளஞ் சாரணர், எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக மிளிர்வதற்கு வேண்டிய சாரணீய அறிவைப் பெறுவதற்கு நீங்கள் வழிகாட்டிகளாக அமைந்திருக்கிறீர்கள். எனவே உங்கள் சேவையின் மூலம் எங்கள் நாடு முன்னேற்றம் அடையும் என்பதில் ஐயமில்லை.''

இலங்கைச் சாரணர் சங்கக் கிளிநொச்சி மாவட்டச் சாரணர் தலைவர்களுக்கான ஆதாரப் பயிற்சி நெறி வகுப்பைக் குத்துவிளக்கேற்றி அங்குரார்ப்பணஞ் செய்துவைத்து உரையாற்றுகையில் மாவட்ட ஆணையாளர் திரு. கே. கோபால கிருஷ்ணர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் திரு. ஈ. எஸ். அரசரத்தினம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட வகுப்புகள் தொடர்ந்து நான்கு தினங்களாக நடைபெற்றது.

## சரக்கு கப்பல்கள் கொள்வனவு

(கொழும்பு)

தென்கொரியாவிலிருந்து இரண்டு சரக்குக்கப்பல்களை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்யவுள்ளது.

இக்கப்பல்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி 20 லட்சம் டாலர் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. (வெ)

## சோயாஅவரை செய்முறை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின் பொதுக்கூட்டம் சித்திரை மேழி கிளைச்சங்கத்தில் நடைபெற்றபோது சோயா அவரையிலிருந்து பால் தயாரிப்பது, சோயா இறைச்சிக்கறி தயாரிக்கும்முறை, அப்பளம் தயாரித்தல் ஆகியசெய்முறைப்பயிற்சிகள் இடம்பெற்றன.

மகளிர்குழுத் தலைவி திருமதி பேர்லி அத்தனுசியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தேசிய கூட்டுறவுச் சபையின் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், தேசிய கூட்டுறவுச் சபை கல்வி உத்தியோகத்தர் திருமதி தவபாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஊர்காவல்படை: நியமனம் பற்றி ஆலோசனை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளைகளின் மத்திய குழுக்கூட்டம் உபதலைவர் சட்டத்தரணி மு. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றபோது ஊர்காவல் படைக்கு தகுதியானவர்களை நியமிப்பதற்குத் தொகுதியிலுள்ள விசேட சேவை உத்தியோகத்தர்கள், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஆகியோரினது ஆலோசனைகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர் சிபார்சு செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

சித்தங்கேணியிலுள்ள வட்டு எம் பியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் தொகுதியிலுள்ள 16 கிளைகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஊர்காவல்படைக்கு ஆட்களை நியமிப்பதில் தொகுதி எம். பி. யின் சிபார்சு கோரப்பட்டிருப்பதால் கிராமசேவை அலுவலர் பிரிவுகள் தோறும் இயங்கி வரும் கூட்டணிக்கிளைகளின் கருத்துகளை பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிப்பது என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டுவிழா

(பண்டத்தரிப்பு)

மாதகல் நாவலர் சனசமூக நிலையத்தின் 15-வது ஆண்டு நிறைவு விழாவை அடுத்த மாதம் 9-ம் திகதி நடாத்துவது என்று நிலையத்தின் செயற்குழு தீர்மானித்துள்ளது. விழாவிற்கு பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவை அழைப்பது என்றும் பட்டிமன்றம் கவியரங்கம் ஆகியவற்றை நடாத்துவது என்றும் விசேட மலர் ஒன்றை வெளியிடுவது என்றும் நிலையத்தலைவர் திரு. வி. நடராசா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


**Northern Region Transport Board**

REGISTRATION OF LOCAL SUPPLIERS AND CONTRACTORS FOR 1982

Applications are invited from Suppliers, Manufacturers, Distributors, Contractors and Business Organisations who wish to register themselves for the supply of under-mentioned goods and services during the year 1982, to the Northern Region Transport Board.

1. All types of stationery.
2. Office equipment and furniture.
3. Hardware items
4. Paints.
5. Spare parts for motor vehicles.
6. Tyres and tubes.
7. Batteries.
8. Spring blades.
9. Auto electrical goods.
10. Small tools.
11. Uniform materials.
12. Rain coats, brief cases, shoes and other leather products.
13. Fire fighting equipment.
14. Paper roles for ticket machines and calculating machines.
15. Date stamps and rubber stamps.
16. Brooms, ekel brooms, brushes and carpets.
17. Cotton waste and banian waste.
18. Household electrical goods.
19. Table and ceiling fans.
20. Torches and batteries.
21. Coconut shell charcoal.
22. Soap, disinfectants, soft soap and welfare equipments.
23. Timber and planks.
24. Building materials.

SERVICES

1. Printing.
2. Repairs to typewriters and calculators.
3. Repairs to electrical equipments.
4. Repairs to fire fighting equipments.
5. Repair to furniture.
6. Tailoring of uniforms.
7. Civil engineering works.
8. Purchase of waste paper.

All applications should be sent under Registered Cover to the SUPPLIES OFFICER OF THE NORTHERN REGION TRANSPORT BOARD to reach him ON OR BEFORE 26th APRIL, 1982.

The Suppliers and Contractors who are already registered should forward fresh applications.

If registration is sought for more than one (1) item, a separate application should be forwarded to each item. All such applications may be sent in one envelope marked "REGISTRATION OF SUPPLIERS 1982".

S. KANAGARATNAM,
Chairman Competent Authority
NORTHERN REGION TRANSPORT BOARD

165, 4th Cross Street,
JAFFNA.

2886


# "எந்தச்சக்தியினுலும்எம்மை திசைதிருப்பிவிட முடியாது!

## ஊர்காவல் படையில் 2000 இளைஞர்கள்"

### உப அஞ்சல் அதிபர் சங்க கூட்டததில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''திரு. வைகுந்தவாசன்லண்டன் மாநகரிலிருந்து வெளியிட்ட சுதந்திரப் பிரகடத்தை நாம் கண்மூடித்தனமாக ஆதரித்திருந்தால் எமது மக்களுக்குப் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும். திரு.வைகுந்தவாசனின் சுதந்திரப் பிரகடனம் புஸ்வாணமாகிவிட்டது. இந்தப் பிரகடனம்காலத்துக்கு முந்திய செயலாகும் என்று நான் அவருக்குமுன்னர் இது பற்றி எழுதியுள்ளேன். எந்த நாடும் எம்மை அங்கீகரிக்கும் நிலைமையில் இல்லாதபொழுது இதனை வெளியிட்டது வெறும் ஏமாற்றுத் தீர்மானமாகும்''.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற உப அஞ்சல் அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

#### அதிகாரத்தை அதிகரிக்க

சங்கத் தலைவர் திரு. அ, கோபாலரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர்க்கட்சிமுதல்வர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''எமதுநிலத்தையும், எமது மக்களையும் பாதுகாக்கவே நாம் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றோம். இந்தச் சபைக்குரிய அதிகாரங்களை அதிகரிக்கச் செய்யவே நாம் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றோம். ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்துடன் எந்தவிதமான ஒப்பந்தமும் செய்யாமலே, நாம் வெளிநாடுகளில் நிகழ்த்திய உரைகளினுலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் வற்புறுத்தலினுலுமே அபிவிருத்தி சபைகள் அமைக்கப்பட்டன.

#### கொள்கையில் மாற்றமில்லை

'அரசியலை நடத்திச் செல்லும் வழி எமக்குப் புதிதல்ல. இதனை எவரும் எமக்குச் சொல்லித்தரத் தேவையில்லை. நாட்டில் 'எந்த நிலைமை ஏற்பட்டாலும், எமது கொள்கையில் எதுவித மாற்றம் ஏற்படவுமில்லை; ஏற்படப்போவதுமில்லை. நாம் எமது கொள்கையை கைவிடவுமில்லை; கைவிடப் போவதுமில்லை.

#### எமக்கு ஏற்பட்ட இழப்பு

'தமிழ் மக்கள் கடந்த ஐந்து வருடங்களாக பல துன்பங்களையும் அனுபவித்துவருகின்றனர் தேர்தலின் பின்னர் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தால் முந்நூற்றுக்கு மேற்பட்டோர் இறந்தனர். எத்தனையோ சகோதரிகள் கற்பை இழந்தனர். எத்தனையோ பேர் தமது பெருந்தொகையான சொத்துக்களை இழந்தனர். சுமார் ஐம்பதினுயிரம்பேர்களுக்கு மேற்பட்டோர் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகத் திரும்பினர். இதனைத் தொடர்ந்து எத்தனையோ சம்பவங்கள் ஏற்பட்டுவருகின்றன. எப்படியான நிலைமைகள் ஏற்பட்டாலும், எந்தச் சக்தியினுலும் எம்மைத் திசைதிருப்பிவிட முடியாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றேன். தமிழ் மக்களின் பொறுப்புக்களை ஏற்றிருக்கும் நாம் பொறுப்பற்ற முறையில் நடக்கமுடியாது. புத்திசாதுரியமாக மக்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பு எம்மையே சார்ந்திருக்கிறது.

#### ஊர்காவல் படைகள்

கிராம மக்களின் உடமைகளையும், மக்களையும் பாதுகாக்கவே ஊர்காவல்படைகள் அமைக்கப்படவிருக்கின்றன. யாழ். மாவட்டத்தில் இப்படையில் இரண்டாயிரம் இளைஞர்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறுர்கள், இவர்களின் ஒத்துழைப்பின்மூலம் முன்னர் நடந்ததுபோலஆபத்கள் நாட்டில்ஏற்படாமல்பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. 18 வயதுக்குமேற்பட்டோர் கிராமங்கள்தோறும் கிராமசேவையாளர் பிரிவு தோறும் இப்படையில் சேர்க்கப்படவிருக்கின்றனர். இவர்களின் பொறுப்புக்கள் யாவும் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபரின் கையிலேதான் இருக்கும்.

#### உபஅஞ்சல் அதிபர்கள்

'கிராமங்களில் மக்களின் சேவைக்குரிய நிலையங்களாகவே தபால் நிலையங்கள் இருக்கின்றன. அங்கு பணிபுரியும் உப அஞ்சல் அதிபர்கள் கிராம மக்களின் நலன்கருதி கிராம மட்டத்தில் நாள்முழுவதும் வேலைசெய்கிறுர்கள். தொலைபேசி வசதியில்லாத கிராமங்களில் இரவில்கூடஇவர்கள்பணியாற்றுகிறுர்கள். சேவையிலிருக்கும் உப அஞ்சல் அதிபர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பங்கள் நிர்க்கதியாகின்ற நிலையில் இருந்துவருகின்றன. கிராமங்களில் வேறு தொழில்களைப் பார்த்துக்கொண்டு இவ் வேலையைச் செய்யமுடியாது. இவர்கள் மேலதிகமாகச் செய்யும் வேலைகளுக்கு மேலதிக சம்பளம் கிடையாது. இப்படியாக தம்மை அர்ப்பணித்து சேவைசெய்யும் இவர்களை அரசசேவையில் சேர்க்கவேண்டும். இவர்களுக்கு அரச ஊழியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைக்க வேண்டும். இவர்கள் பிணைப்பணமாகக்கட்டிய பணத்திற்கு நியாயமான வட்டி வழங்கப்படவேண்டும். புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படவேண்டும். இவற்றை கடந்த வரவு செலவுத்திட்ட உரையின் போது வற்புறுத்திக்கூறினேன். இதனைச் செவிமடுத்த அமைச்சர் இதனைச்செயல் படுத்துவதாகக் கூறினுர். ஆனுல் இன்று வரை இது நிறைவேற்றப்படவில்லை. ஏனையஊழியர்களுக்குவழங்கப்படும் சம்பள உயர்வுகள்போல இவர்களுக்கு சம்பள உயர்வுகளும் ஓய்வூதியமும் வழங்கப்பட வேண்டும்.

#### கோரிக்கைகளை வெல்ல முடியும்

உங்களது சங்கம் இந்த நான்கு கோரிக்கைகளையும் முன்வைத்து மகஜர் ஒன்றைத் தயாரித்து அமைச்சருக்கு அனுப்புவதுடன் தொழிற்சங்க முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கும் ஒரு பிரதியொன்றை அனுப்பிவைத்தால் நானும் இவ்விஷயமாக தபால் அமைச்சருடனும், ஏனைய அமைச்சர்களுடனும் பேசி ஆவன செய்ய ஆயத்தமாக இருக்கிறேன். தற்போதைய தபால் அமைச்சர் நல்ல மனம் படைத்தவர். நாம் தொடர்ந்து முயற்சிசெய்தால் நமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும். ஏதேச்சாதிகார அரசாங்கம் அநேக தொழிற்சங்கங்களை கடந்த ஐந்து வருடங்களில் அழிந்துவிட்டது. நீங்கள் எல்லோரும் கட்டுப்பாட்டுடன் ஒன்றுபட்டு இச்சங்கத்தைக் கட்டிவளர்ப்பதுடன், எமது இயக்கத்தையும் கட்டி வளர்க்க கிராம ரீதியில் நீங்கள் செயல்பட வேண்டும்'' என்று குறுப்பிட்டார்.

[அரி. நிருபர்]

## வட்டு எம். பி. சுகவீனம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு திடீர் சுகவீனமடைந்ததைத் தொடர்ந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

கடந்த இருவார காலமாக காங்கேசன்துறையிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் வீட்டிற்குச் சென்ற திரு. திருநாவுக்கரசு நேற்று மீண்டும் திடீரென சுகவீனமடைந்ததைத் தொடர்ந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்டது. பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கியநாணய சங்க பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட ஐக்கிய நாணயசங்கங்களின் சமாஜ வருடாந்த பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 2-ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# சர்வதேசியமும்தனித்துவமும் இணையவேண்டும்

வெ. யோகேஸ்வரன்

[யாழ்ப்பாணம்[

''பிரிவினைவாதியான நான், சர்வதேச அன்பு சகோதரத்துவ இயக்கமேடையில் தோன்றிப் பேசுவது சிலருக்கு வியப்பளிக்கலாம். ஆனல் சர்வதேசியத்திற்கும் ஒருமைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை உணர்ந்தவர்களுக்கு எனது நிலைப்பாடு நன்கு விளங்கும்.''

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம்மண்டபத்தில் சர்வதேச அன்பு, சகோதரத்துவ இயக்கம் நடாத்திய கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: ''ஒவ்வொரு இனமும், ஒவ்வொரு குழுவும் தனது தனித்துவத்தைப் பேணும் அதே வேளையில், மனித இனத்தின் சர்வதேசிய தன்மையையும் மறக்கக்கூடாது. தனித்துவமும் சர்வதேசியமும் இணைய வேண்டும்.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 6ம் திகதி

திங்கட்கிழமை

(19—4—82)

மேடம்: உண்மை இன்று ஊமையாகிவிடும் உதவி செய்யச் சென்று உபத்திரவத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள் செலவு வகைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும்.

இடபம்: வாகன சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம் வரவிலும் திருப்தி காணப்படலாம் தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபமும் கிடைக்கலாம்.

மிதுனம்: செய்தொழிலில் சிறப்புண்டு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் சிலருக்கு அதிர்ஷ்டஇலாபமும் கிடைக்கலாம்.

கடகம்: தூரப்பயணம் துயரத்தைத் தரலாம் வருமானத்தில் வீழ்ச்சி தென்படும் வைத்தியச்செலவுகளுக்கும் இடமுண்டு சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும்.

சிங்கம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கலாம் அறிஞர்களின் வருகை உற்சாகத்தைத் தரும் எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும்.

கன்னி: ஆதரவு கொடுத்தவரே முடிவில் கைவிரிக்கக் கூடும் கடன் தொல்லை அதிகரிக்கலாம் நாள் எல்லாம் சஞ்சலம் பிணிக்கு இடம்கொடுக்காது சுகாதாரத்தைப் பேணவும்.

துலாம்: கட்டி வெல்லம் போல் வாழ்க்கை இனிக்கும். காதலர்கள் எண்ணங்கள் கைகூடும் இனபந்துக்களின் ஆதரவு கிடைக்கும்.

விருட்சிகம்: தொழில் துறையில் நல் மாற்றங்கள் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நண்பர்கள்மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

மகரம்: பொருள் வரவு தாராளமாக இருக்கும் சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு இன்று கவர்ச்சிகரமான தினம்.

தனு: துன்பத்தின் ரேகைகள் படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் கடன் தொல்லைகள் அதிகரிக்கலாம் நஷ்டம் ஏற்படுவதற்கு இடமுண்டு.

கும்பம்: பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத்தரும் பிறருடன் பகைத்துக்கொள்ள நேரிடும் குடும்பத்திலும் சிறிது புயல் வீசலாம் வெளியிடத் தொடர்புகளில் அமைதிவேண்டும்.

மீனம்: மேடைப்பேச்சாளரும் புகழுடைவார்கள் நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான தினம் இனபந்துக்களின் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாவன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
கமலஹாசன்
நினைத்தாலே
இனிக்கும்

Regal
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
ROBERT TAYLOR
in
Hunter of the Unknown

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்.–தேவிகா
குமுதம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
பெரியஇடத்துப்பெண்
நாளை முதல்
குழந்தையும்தெய்வமும்

ராஜா தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
(யாழ்ப்பாணம்)
சிவாஜி, சாவித்திரி, சந்திரபாபு
காத்தவராயன் (புதிய பிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)
From 20th to 22nd — HUSTLE

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
19-4-82 — 20-4-82 மட்டும்
விஷ்ணுவர்தன்
சந்திரகலா
அலைகள் (புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, ஜெயலலிதா, நம்பியார்
தாய் (புதிய பிரதி)

4-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ரஜனிகாந்த்—சிவாஜி கணேசன்—
ஸ்ரீபிரியா—சுபாஷினி— நாகேஷ் நடித்த
★நட்சத்திரம்★
(ஈஸ்மன்ட் கலர்)

## கிளிநொச்சி சென். திரேசாவில் நூலகம்

[பரந்தன்]

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரியில் நூலக வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நூல்நிலையத்தில் புத்தகங்களும், சஞ்சிகைகளும் சீரிய முறையில் ஒழுங்கு செய்து வைத்திருப்பதைப் பார்த்துத் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும், தமது நூல் நிலையங்களைப் பரிபாலித்தல் மாணவர் கடமையென்றும் கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரி மாணவக் நூல்நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய பிரதமக் கல்வியதிகாரி திரு. வி. சபாநாயகம் கூறினார்.

இந்நூல்நிலையத்திற்கு வேண்டியவைகளைத் தாம் செய்து கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் அதிபரின் விடா முயற்சியே இக்கல்லூரியின் முன்னேற்றத்திற்குக் காரணமென்றும் அவர் மேலும் கூறினார்.


அதிபர் முத்தமிழ்ச் செல்வி செல்வி ராதா சோமசுந்தரம் 101 நூல்களை இந்நூலகத்திற்கு அன்பளிப்புச்செய்தார். சக ஆசிரியரினதும், பெற்றோரினதும் ஒத்துழைப்பே இம்முன்னேற்றத்திற்குக் காரணமென்றும் அவர் தெரிவித்தார். (அ)

## உதவிப்பணம் இன்னும் இல்லையாம்

[பரந்தன்]

கடந்த வருடம் கிளிநொச்சித் தொகுதியில் ஏற்பட்ட வரட்சிக்காக நடாத்தப்பட்ட வரட்சி நிவாரண வேலைகளுக்கானபோதிலும் பரந்தன் பகுதியில் இன்னமும் வழங்கப்படவில்லையாம்.

இப்பிரச்சனையைத் தீர்க்கக் கோரும் பிரேரணை ஒன்றைப் பரந்தன் கிராமோதயசபையில் கொண்டுவர சபை உறுப்பினர் திரு. கி. தவராசா முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். [அ]



லிங்கம் என்னும் சொல்லின் கருத்து, அடையாளம் என்பதாகும் 'எதற்கு அடையாளம்' என்ற கேள்வி எழுமானல் 'அந்த ஆலயத்திற்கு' என்பது மறுமொழியாகும். ஒரு மைல் தொலைவில் இருந்து நாம் பிரயாணம் செய்யும் பொழுதெல்லாம், தூரத்தில் வானளாவி நின்று எம்மை 'இங்கு தேவாலயம் இருக்கின்றது; தரிசித்து இன்பம் அடையுங்கள்' என்று கூறுவதுபோல் வானளாவி விளங்கும் கோபுரமே ஒரு ஆலயத்தின் அடையாளமாகும். அந்தக கோபுரங்கள் ஸ்தூலலிங்கங்கள் என்று ஆகமங்களில் விதந்து கூறப்படுகின்றன. இந்தக் கோபுரங்களில் நந்தாவில் கோபுரம், ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் ஸ்தூலலிங்கமாக, கொக்குவில் நந்தாவில் மக்களுக்கு விளங்குகின்றது. இதில் அம்பிகையின் திருவிளையாடல்களெல்லாம் சுதா விக்கிரகங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து கலசங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோபுரதரிசனம் கோடி பாவங்களை நீக்குமென்றும், கோடி புண்ணியங்களைக் கொடுக்கும் என்றும் வேதாகமங்கள் கூறுகின்றன. ஆலயத்திற்குள் சென்று மூர்த்திகளினுடைய திருவடிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொறுமை நமக்கு இல்லாததால்தான் இறைவன் தன் பாதஸ்தானமாக கோபுரத்தை அருளிச்செய்திருக்கிறுன். இப்படிப்பட்ட இராஜகோபுரத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி கடந்த மாதம் 26ம் திகதி சகஸ்ரசங்காபிஷேகமும்ஸ்தூல கோபுர லிங்கத்திற்கு 108 சங்குகளால் பாவனு அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனை முதலியனவும் கோயில் பிரதம குருக்கள் நா. முத்துக்குமாரசாமிக் குருக்கள் தலைமையில் பல குருமார்களால் நடத்தப்பட்டது. மேற்படி தேவஸ்தான இராஜகோபுரமே இங்கு காணப்படுகிறது.

-ஓர் அடியார்

## விளையாட்டுப்போட்டிகள்மூலம் ஒற்றுமை வளர்கிறது

[அரியாலை]

''கிராமங்களில் ஆண்டுதோறும் விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதன் மூலம் கிராமிய மக்களிடையே மறைந்துகிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரமுடியும். இவ் விளையாட்டுப் போட்டிகள் கிராம மக்களிடையே ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் வள்ர்க்க உதவுகிறது. போட்டிகளில் பங்கெடுக்கும் வீரர்கள் பொறுமைகளைத் தவிர்த்துக் கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைக்கவேண்டும். இதன் முலமே கிராமம் வளர்ச்சியடையும்.''

இவ்வாறு சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா, கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிர்ாம அபிவிருத்திச் சங்கம், சனசமூகநிலையம் ஆகியவற்றின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

விளையாட்டுத் தலைவர் திரு. தம்பி. ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. வாமதேவன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

## 'கிராமத்தின் வளர்ச்சியே இலட்சியமாக இருக்கவேண்டும்'

(மட்டுவில்)

''கிராமத்தின் அபிவிருத்தியே ஒவ்வொரு கிராமவாசியினதும் இலட்சியமாயிருத்தல் வேண்டும்'' என்று மட்டுவில் நுணுவில் கிராமோதயசபைத் தலைவர் திரு. க. இளையதம்பி மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் விசேட சேவை அலுவலர் திரு. பொ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற கிராமோதய சபைத் தலைவர் தெரிவுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

ஆசிரியர் மு. கனகசபையும் ஆசிரியர் க. இளையதம்பியும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டனர். திரு க. இளையதம்பி 13 வாக்குகளும், திரு. மு. கனகசபை 12 வாக்குகளும் பெற்றனர்.

## இசைவிழா

[யாழ்ப்பாணம்]

கலைஞர் ரமேஷ் வைகுந்தநாதன் தயாரித்தளிக்கும் இசைவிழா, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெறவிருக்கிறது.

இந்த இசை விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## ஊர்காவல் படை

(கரவெட்டி)

அடுத்த மாதம் முதல் இயங்கவுள்ள ஊர்காவல் படைக்கு ஆட்சேர்ப்பதற்கான வேலைகள் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பகுதி கிராம சேவைஅலுவலர் பிரிவுதோறும் திரட்டப்பட்டு வரும் இவ் ஆட்சேர்ப்பு வேலைகளை விசேட சேவை உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியில் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அப்பையா அன்சன்ஸ் 29/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2865

J V C வீடியோ கசற் றெக்கோடர் மொடல் HR3660EG உடன் விற்பனைக்குண்டு. ஸ்ரான்லி கோப்றேசன், 79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 2880

நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரிக்குஅருகாமையில் 10பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணி உண்டு. விபரங்கட்கு: நாயன்மார்கட்டு வைத்தியசாலை டாக்டர் உமாகாந்தனிடம் தொடர்பு கொள்ளவும். 2864

மானிப்பாய் பட்டினசபை எல்லைக்குள் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கையில், 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஆலடிச் சந்தி, வே. சி. கந்தையா, (தேனீர்க்கடை) அவர்களிடம் விபரங்களை அறியவும். 2867

ஊர்காவற்றுறையில் ஓர் சிறிய வீடும், நல்லூரில் வீடு கட்டுவதற்கேற்ற காணியும் உண்டு. தொடர்பு கொள்க: 52, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 334. (2891)

## தேவை

அரச பெருந்தோட்டத்தில் 12 வருடங்கள் தோட்ட மேற்பார்வையாளர் (Field officer) ஆக கடமையாற்றும் 35வயதுடையவர் தகுதியான பதவி ஒன்றை வடமாகாணத்தினுள் தேடுகிறார்: விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 2881 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2881

## தவறியபொருள்

நாவற்குழிக்கும், கைதடிச் சந்திக்குமிடையில் 15-4-1982 வியாழக்கிழமை மாலை 4மணியளவில் பார்சல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் கைதடிச் சந்தியில் இருக்கும் லீலாவதிஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் தகுந்த அத்தாட்சியைக் கூறிப்பெற்றுக்கொள்ளவும். 2902

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துத்தம்பி சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

முத்துத்தம்பி சுப்பிரமணியம் கைம்பெண் தையல்நாயகி, கொக்குவில் கிழக்கு.

மனுதார்.

மரண சாதன ) இல. 3559
நியாயாதிக்கம் )

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

1981ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

2853


## மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி
## 6பேர் கொண்ட 6ஓவர்கள்

இம்மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை நல்லூர் 'சங்கிலியன் மன்றம்' நடாத்தும் மேற்படி சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ளவிரும்பும் கழகங்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

கட்டணம் ரூபா 15/-

— மன்ற நிர்வாகிகள்

''அன்பகம்''
2, இராச வீதி, நல்லூர். 2903



## Week - End Classes
## I. C. M. A. Foundation
## Stages 'A' & 'B'

by D. R. E. C.
THE CENTRE FOR
DEVELOPMENT RESEARCH,
EDUCATION AND COMMUNICATION LTD.

Commencing: 1st MAY 1982
Enrolmet: 9.30 a. m.
For further particulars,
Contact: OFFICE ASSISTANT,
D. R. E. C.
No. 15, Sirambiady Lane,
Jaffna. (Near Sridhar Theatre)


மு. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்
புலோலி தெற்கு,
கந்தப்பிள்ளை கைம்பெண்
சிவக்கொழுந்துவின்
மரணசாதனமில்லா சொத்து
விடயத்தில்

— மரணமெய்தியவர்

கந்தப்பிள்ளை மகள் சாந்தகுமாரி, புற்றளை,
புலோலி தெற்கு.

— மனுதார்.

மரணசாதன)
நியாயாதிக்கம்) 1142/Testy

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982-ம் ஆண்டு ஆடி மாதம் 02-ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இம் மன்றின் முன்தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

இன்று 1982 சித்திரை 15-ம் திகதி.

மன்றின் ஆணைப்படி

வே. அருணாசலம்,
பதிவாளருககாக,

மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை. 2874

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்

வழ. இல: ரி/3655

காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற கிறேஸ் பரிமளம், சிவானந்தராஜா என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்

— மரணமெய்தியவர்

திருமதி நேசரட்ணம் குமாரசுந்தரம்,
46/4, 1-ம் ஒழுங்கை,
பருத்தித்துறை றோட்,
யாழ்ப்பாணம்.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காகமேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ம் ஆண்டு வைகாசிமாதம் 14-ம் திகதியன்று முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982-ம் ஆண்டு மாசிமாதம் 3-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

[ஒப்பம்]
தா. குலஞானம்,
பதிவாளர்.

வரைதல்:
[ஒப்பம்]
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி

2893

# சேக்கிழார்கண்ட.....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வழிய எடுத்தியம்பும்முறை எண்ணத்தக்கது. திருத்தொண்டிற்கொரு தலைவராக வந்தவதரித்த திருநாவுக்கரசரைத் தொண்டின் திருவுருவாகவே சேக்கிழார் பெருமான் படைத்துக் காட்டுகிறார்.

சேக்கிழார், அப்பரடிகள் காலத்திற்கு மிகமிகப் பிந்தியவர். ஆயினும் அப்பரடிகளை நினைந்து நினைந்து தமது உள்ளக்கிழியில் உரு எழுதி ஓவாத் தமிழ் தந்துள்ள அருமை நினைந்து நினைந்து இன்புறத்தக்கது. அப்பரடிகளின் திருமேனி, திருவுள்ளம் ஆகியவற்றைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். அப்பரடிகள், திருநீறணிந்து மகிழ்வதைக் கடமையாகக் கொண்டவர்; பழுதிலாத்துறவாலும், சீலம் நிறை வாழ்வாலும், தவத்தின் வலிமையாலும், திருவருள் நினைவாலும் பொன்னொளிர் மேனி பெற்றவர்! அந்தப் பொன்மேனியில் திருநீறு மண்டி மணம் கமழ்கிறது.

இறைவனின் திருவடிகளை அப்பரடிகள் தம் நெஞ்சு அண்ணித்துத் தொட்டுத் தடவிக்கொண்டிருக்கிறது. அப்பரடிகள் நெஞ்சத்தைத் திருவடிகள் திருக்கோயில் கொண்டருளின. அப்பரடிகளின் நெஞ்சம் ஒன்றையே நினைக்கிறது; மறந்தும் பிறிதொன்றை நினைப்பதில்லை. அதுவே எந்தை ஈசன் திருவடிகள்! நெஞ்சத்தில் திருவடியை நினைந்து நினைந்து இன்ப அன்பினில் திளைத்து மகிழ்வதால் கண்களில் கண்ணீர் மல்குகிறது அன்பின் பெருக்கில் ஊற்றெடுக்கும் கண்ணீரே அது! கண்கள் காதற் பெருக்கில் கண்ணீரை மழையெனப் பொழிகின்றன.

அப்பரடிகளின் செந்நா சிவத்தையே பாடிய செந்நா. அவர் திருவாயில் உதித்த சொற்கள் செஞ்சொற்கள்; சிவத்தின் செவிக்கே அமுதமெனத் திகழ்ந்த சொற்கள். நன்றுடையானே நாவுக்கரசரெனப் பெயர் சூட்டிய பேரரசு. அப்பரடிகள் திருவாயில் ஊற்றெடுத்த திருத்தமிழைச் செவிமடுப்பதற்கென்றே எம் பெருமானும் கயிலையை மாற்றிக்கொண்டார்! இத்தகைய இனிய இயல்புகளைக் கொண்ட அப்பரடிகள் புலன்கள்மீது தனியரசு செலுத்திய அரசு எனவும், நற்றமிழ்க்கோர் நாவுக்கரசெனவும், சிவநெறிக்கோர் அருளரசு எனவும் விளங்கியமையைச் சேக்கிழார் பெருமான் என்பு நெஞ்சுருகப் பாடுகின்றார்:

''தூயவெண் ணீறு
துதைந்தபொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு
நீர்பொழிகண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும்
உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே!''

என்பது திருப்பாடல்.

[நன்றி: திருக்கோயில்]

## அதிர்ஷ்ட லாபச் சீட்டு

மானிப்பாய் திருவள்ளுவர் சனசமூக நிலையம் நடாத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற இலக்கங்கள்:

| | | |
|---|---|---|
| 1ம் | பரிசு | — 0210 |
| 2ம் | '' | — 0901 |
| 3ம் | '' | — 5483 |
| 4ம் | '' | — 4032 |

10 ஆறுதல் பரிசுகள்:
0032, 3977, 4914,
5905, 4940, 3065,
2527, 5006, 9013,
3135

தெரிவானஅதிர்ஷ்டலாபச் சீட்டு எண்களுக்குரிய பொருட்கள் 15-05-82க்கு முன் எடுக்கப்படாவிடின் நிலையத்தின் உரித்தாக கருதப்படும்.

அ. கிருஷ்ணதாசன்,
2901 செயலாளர்,

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட
நீதிமன்றம்

காரைநகர், அறுகம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தில்லைநாதன் கைம்பெண் தங்கமுத்துவின் மரணசாதனத்தின் மரணச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

வழ. இல. ரி/62

தில்லைநாதன் சிவகுமாரன்,
காரைநகர் தற்போது
கனடா. அவரின் தத்துவகாரன் தில்லைநாதன் இராஜசேகரம் மூலமாக

— மனுதார்.

எதிராக

மேலேயுள்ள இலக்கங்கொண்ட பரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலேபெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982-ம் ஆண்டு சித்திரை மாதம் 29ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 5-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

[ஒப்பம்]
ஏ. சிறில்,
பதிவாளர்.

வரைதல்;
[ஒப்பம்]
செ.மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.

2892

## கூட்டம்

லண்டன், ஏப். 18

போக்லண்ட்தீவுகள் நெருக்கடி குறித்து ஆராய்வதற்காக பிரிட்டிஷ் பிரதமமந்திரி திருமதி மாகரட் தட்சர் நேற்று விசேட அமைச்சரவை கூட்டமொன்றை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. ]வெ]


## நெடுந்தீவு மாவலித்துறை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பிடாரி) அம்பாள் ஆலய

## சீட்டிழுப்பு முடிவுகள்

1வது பரிசு — 27660
2வது பரிசு — 37956
3வது பரிசு — 42232

### ஆறுதல் பரிசுகள் பத்து

28399, 36717,
6533, 8444,
822, 16423,
22337, 4827,
38984, 23088,

- திருப்பணிச்சபை
2897

# "இராமகிருஷ்ணர் வழியில் பேரின்பப் பேற்றைப் பெறுவோம்"

[புலோலி]

"ஸ்ரீ இராமகிருஷ்ணர் உலகத்திலுள்ள சமயங்கள் எல்லாவற்றையும் மதித்து உணர்ந்தார். பல்வேறு சமயங்களும் இறைவனை அடைவதற்கு உரிய வழிகளையே காட்டுகின்றன. எனவே ஒவ்வொருவரும் தத்தமது சமயம் போதிக்கும் மார்க்கத்தை மனப்பூர்வமாகப் பின்பற்றினால் பேரின்பத்தையடையலாம் என்று ஸ்ரீஇராமகிருஷ்ணர் எமக்குப் போதித்துள்ளார்."

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற ஸ்ரீஇராமகிருஷ்ண பரம ஹம்சரின் 146வது ஜனன தின விழாவிலே உரையாற்றிய சுவாமி சித்ருபானந்தா குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய சுவாமி சித்ருபானந்தா கூறியதாவது:

"ஸ்ரீஇராமகிருஷ்ணரைப்பற்றியஒவ்வொரு செயலையும்பற்றிச்சிந்திக்கும்போதுஅவை அற்புதமானவையாக விளங்குகின்றன. ஞான இச்சை உள்ளவனுக்கு லௌகீக விஷயங்களினுல் யாதொருபயனுமில்லை. உலகம் உறங்கும் நள்ளிரவே ஆத்மக்ஞனுக்கு உணர்வு பொங்கிய பகற்காலம். மற்றவர்களுக்குப் பகலாவது அவனுக்கு இரவாகின்றது. இத்தத்துவத்திற்கு ஸ்ரீ இராமகிருஷ்ணரின் வாழ்க்கை பேருதாரணமாக விளங்குகின்றது.

"மகாசக்தி தோன்றும் இடமெல்லாம் இறைவனும் ஆவிர்ப்பவமாகி நிற்கிருன். சில வருடங்களுக்குமுன் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பெருமை உலகமெங்கும் பிரசித்தியடைவில்லை என்ருலும் இன்று அவரின் மகிமையை உணராத தேசம் ஒன்றுமில்லை.

"ஸ்ரீராமகிருஷ்ணர் தமது தூயமனத்தின் கண்ணேயே ஞானபொக்கிஷத்தைத் தேட முற்பட்டார். வெகுவிரைவிலேயே காரிய சித்தியும் பெற்ருர். குறைவுபடாத அந்தப் பொக்கிஷத்திலிருந்து ஆண், பெண் அனைவருக்கும் ஞானத்தை அளிக்கவும் துணிந்தார். அறிஞனும், மூடனும், பணக்காரனும், ஏழையும் அதனுல் பெரும்பேறு பெற்ருர்கள்.

"இவ்வுலகிலே பற்றுதல்களே இன்பத்திற்குக்காரணம். ஆசாபாசங்களை முன்னிட்டுத்தான் உலக வாழ்வு சந்தோஷத்தைக்கொடுக்கிறது. ஏதோ ஒருவிதத்தில் பற்றுதல்கள் மனிதனை உலகத்தோடு பிணைத்துவிடுகின்றன. மேல்நோக்கி இறைவனைநாட அவைகள் வழிவிடுவதில்லை. மனிதனின் சுதந்திரத்தை அவைகள் அபசரித்துக்கொள்கின்றன. உள்ளத்தின் விரிவை அவை அபகரித்துக்கொள்கின்றன.

"இறைவனின் மலரடித் தேனைப் பருகுவதற்கும் விடுதலைபெற்றுப் பேரின்பப் பேற்றை அனுபவித்துக்கொண்டு அச்சமின்றி உலகத்தில் சஞ்சரிப்பதற்கும் இச்சிப்பவன தன்மனத்தில் பற்றுதல்கள்வளர்வதற்கு இடம்கொடுக்கக்கூடாது.

"ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் அகங்காரம் அணுவளவும் கிடையாது. நான், என்னுடையதென்று அவர் சொன்னதேகிடையாது. சர்வலோக மாதாவே அவருடைய உள்ளத்தில் நிறைந்துநின்ருள்.

"ஸ்ரீஇராமகிருஷ்ணர் வாழ்ந்துகாட்டியபாதையில் நாமும் இவ்வுலகத்தில் சிறப்பாக வாழ்ந்து பேரின்பப் பேற்றை அடையவேண்டும்" என்ருர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவிகளின் பஜனையும், செல்வி இந்துமதி தெய்வநாயகத்தின் சொற்பொழிவும், ஆசிரியை செல்வி மங்களேஸ்வரி வைத்திலிங்கத்தின் இன்னிசை விருந்தும் இடம்பெற்றன.

## பிரதமர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

உத்தியோகபூர்வ பேச்சுக்களை சவுதி அரேபிய மன்னர் திரு. காலித்துடன் நாளை [இன்று] திருமதி காந்தி நடத்துவார்.

செய்தியாளர்களுக்கு பதிலளிக்கையில் பாகிஸ்தானும், இந்தியாவும் ஏழை நாடுகள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் இரு நாடுகளும் இல்லை.

பாகிஸ்தானுடன் நட்புறவாக இருக்கவே விரும்புகின்ருேம். பங்களாதேஷின் விவகாரத்தில் நாம் தலையிட விரும்பவில்லை. பங்களாதேஷ் தொடர்ந்தும் எம்முடன் நட்புறவாகவே இருக்கும் என்று நம்புகின்ருேம்" என்ருர். (கு

## பிரெஞ்சு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லான கோயில்களின் விபரங்கள், மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார்கோவிலிலிருந்து சிலாபம் முனீஸ்வரம் வரையிதான ஆலய விபரங்களும் இடம்பெற்றுள்ளது.

இப்புத்தகம் இரு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது.

மாநாடு ஆரம்பமாகும் முதல் நாளான புதன்கிழமை, இலங்கை பூராவுமுள்ள சகல சைவ ஆலயங்களிலும் மணி ஒலிக்கப்பட்டு விசேட பூசை நடைபெறும்.

## இப்படியும் நடக்கிறது

பாரத தேசியக்கவி பாரதிக்கு, சர்வதேச மட்டத்தில் இன்று விழா எடுக்கப்பட்டு வருகிறது.

தொண்ணூற்று ஒன்பது வருடகாலமாக மறந்துவிட்ட பாரதியை, நூருவது ஆண்டிலாவது தமிழகம்......... மன்னிக்கவும், முழு பாரதமுமே முழு வீச்சில் நினைவு கூருவது, வீரமாக இருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் தலைநகர் புதுடில்லியில் பாரதிக்கு நினைவு விழாக்கள், பிரமாண்டமான சிலை, நினைவு மலர் வெளியீடு இத்தனையுடன் ...நினைவு நாணயம்!

தமிழ் நாட்டில் பல சிறப்பு அம்சங்களுடன், கடுகதி ரயில் ஒன்றுக்கும் பாரதி பெயர்!

வாஷிங்டன், மாஸ்கோ, நியுயோர்க் உட்பட பல முக்கிய சர்வதேச தலைநகர்களில் பாரதி விழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

இலங்கையில், தமிழ்ப்பகுதிகளில் பாரதி நினைவாக பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் தினமும் பாரதி தரிசனம்! வீட்டுக்கு வீடு பாரதி!

'ஊடுருவி'


மர அரிவு ஆலைச் சொந்தக்காரருக்கு ஓர் நற்செய்தி!

வீல் பிராண் வட்டவாள் (Wheel Brand CircularSaw)

3 1/2' – 10 G – 42 Teeth

இறக்குமதி செய்யப்பட்டு விற்பனையாகிறது.

கையிருப்பு சொற்பமே - தேவைக்கு முந்துங்கள்

மற்றும்

20 H.P. 15 H.P. மோட்டர், 10 H.P. மோட்டர்,

7 1/2 H.P. மோட்டர் வகைகள்

3 " ஹெயர் பெல்ட் (Hair Belt) ஆகியவற்றிற்கு

கல்கி சன்ஸ் 147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7711 தந்தி: ஸ்ரீராம்


## றீகன் - பிரஷ்நேவ் உச்சி மாநாடு

மொஸ்கோ, ஏப். 18

அமெரிக்க ஜனதிபதி திரு. றீகன் சோவியத் ஜனதிபதி திரு. பிரெஷ்நேவுடன் மாநாடு நடத்த முன்வந்துள்ளார்.

இந்த உத்தேச மாநாடு ஜூன் மாதத்தில் நியூயோர்க்கல் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனதபதியின் இந்த ஆலோசனை குறித்து சோவியத் யூனியன் கருத்துத் தெரிவிக்கையில் மாநாடு ஆக்கபூர்வமான முறையில் அமையுமாஞல் மட்டுமே இந்த உத்தேச மாநாட்டை அக்டோபரில் சுவிற்சர்லாந்தில் நடத்தலாமென்று தெரிவித்துள்ளது.

ஜனதிபதி பிரஸ்நேவ் (வயது 75) உடல்நிலைபற்றி சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் கருத்துத் தெரிவிகையில், ஜனதிபதி நல்ல நிலையில் உள்ளதாகவும், அவரது உடல்நிலைபற்றி வீண் வதந்திகளுக்கு இடமில்லை என்றும் அவர் தனது உத்தியோகபூர்வ அலுவல்களைக் கவனிககக் கூடியதாக இருக்கிருர் என்றும் தெரிவித்துள்ளது. (கு)


## நன்றி நவிலல்

அன்பினீர்,

1982-04-07 இல் நடைபெற்ற எங்கள் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள், ஆசிச்செய்திகள் அனுப்பிவைத்தவர்கள், மற்றும் பல்வகை உதவிகள் நல்கியவர்கள் அனைவர்க்கும் எமது உளம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

அன்புடன்,

மாலி, பபி.

திருநெல்வேலி

198 -04-19

2905

V.R.V. போக்குவரத்துச் சேவை வழங்கும்

புதிய உல்லாச பஸ் சேவை!

கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு

தினசரி இரவு 8-00 மணி கொழும்பு - யாழ்ப்பாணம்

தினசரி இரவு 8-00 மணி யாழ்ப்பாணம் - கொழும்பு

கண்ணியமான பாதுகாப்பு பஸ் சேவை

ஒருவழிப் பயணக் கட்டணம் ரூபா 60/- மட்டுமே

கொழும்பில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

1. கிறீன்லண்ட் ஹோட்டல், பம்பலப்பிட்டி, தொலைபேசி: 85592, 81986
2. V. R. வடிவேற்கரசன், 271, செட்டியார் தெரு, கொழும்பு—11, தொலைபேசி இலக்கம்: 34800, 32540
3. அஜந்தா ஹொட்டல் லிமிட் 125, ஒல்ஹொட் மாவத்தை கொழும்பு, தொலைபேசி இலக்கம்: 32769, 28089

யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

1. V. R. V. ட்ரான்ஸ்போட், சேகரம் கட்டிடம், 188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: இல: 8162
2. றிக்கோ சுவீட் அன் கிறீம் ஹவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 464, 7889

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பஸ் பம்பலப்பிட்டி, கிறீன்லண்ட் ஹோட்டலிருந்து இரவு 7—00 மணிக்குப் புறப்பட்டு நேரே செட்டியார் தெரு கோவிலடிக்கு வந்து, அங்கிருந்து இரவு 8—00 மணிக்குப் புறப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பிரயாணிகள் மேலதிக கட்டணமின்றி வெள்ளவத்தை வரை செல்லலாம்

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு வழமைபோல காலை 6—00 மணி சேவை நடைபெறுகின்றது.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box [illegible], Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.